கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்

முன்னிலை - திரு. ஜெ..வெங்கடேசன், பி.எஸ்.சி.பி .எல்,

கூடுதல் மாவட்ட நீதிபதி ( ( மு.கூ.பொ)

(விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

2022 -ம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2053 தமிழ் சுபகிருது ஆண்டு ஐப்பசி மாதம் 22 ம் நாள்

வழக்கிடை மனு எண். 1/2022

இன்

அசல் வழக்கு எண். 58/2021

குணசேகரன் .. மனுதாரர்

/ 4 ம் பிரதிவாதி

-எதிர் -

கௌரி சார்பாக பவர் ஏஜெண்ட்

வெங்கட்ராமன், ..... எதிர்மனுதாரர்

/ வாதி.

இம்மனு 01.11.2022 அன்று இறுதி விசாரணைக்கு என் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி,எஸ்.சுப்பரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ். ராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் கடந்த 28.03.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உ.வி.மு.சட்டம் கட்டளை 9 விதி 7 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் -**

மனுதாரர் அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. வாதி முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி தாவா தாக்கல் செய்வதில் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்வதற்காக 28.03.2022 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி வழக்கில் ஆட்சேபணை தயார் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தயார் செய்து தாக்கல் செய்ய இயலவில்லை. தற்போது கிடைக்கப் பெற்று இம்மனுவுடன் தாக்கல் செய்வதாகவும், மேற்படி ஆட்சேபணையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் 28.03.2022 தேதியில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ அஜாக்கிரதையாகவோ உரிய காலத்தில் ஆட்சேபணை தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது . எனவே மனுதாரர் பேரில் கடந்த

28.03.2022 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையின் சுருக்கம் -**

மனுதாரரின் மனு சரியல்ல. மனுவில் கூறியுள்ள அனைத்து காரணங்களும் உண்மைக்கு புறம்பானவை. சட்டத்தின் செயல்முறைக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதால் அவரது தவறை மன்னிக்க கூடாது, ஆட்சேபணை தயார் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தயார் செய்து தாக்கல் செய்ய இயலவில்லை கூறியுள்ளது முற்றிலும் உண்மையல்ல.

**5)** தற்போது தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையுடன் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் எந்த கால நீட்டிப்பும் கேட்கவில்லை. சம்மன் சார்வான தேதியிலிருந்து 120 நாட்களுக்குள் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருக்க வேண்டும். வழக்கை காலநீட்டிப்பு செய்வதற்காக தவறான எண்ணம் கொண்டு இம்மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய போதுமான காரணங்களை

மனுதாரர் தரப்பில் குறிப்பிடவில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்யவே மனுதாரருக்கு சட்டப்படி உரிமை இல்லை. எனவே மனுதாரரின் மனுவை அதிக செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகும்.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.

1. இம்மனு அனுமதிக்கக்கூடியதா, இல்லையா, என்பதாகும்?

**7) <u>பிரச்சனைக்கான தீர்வு</u> -**

மனுதாரர் அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கை தாவா சொத்தில் தங்களுக்குள்ள 1/4 பாகத்தை பாகம் பிரித்துத் தர உத்தரவிடக்கோரி எதிர்மனுதாரர் / வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

8) அசல் வழக்கில் இந்த மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுதாரரரை தோன்றா தரப்பினராக அறிவித்து இந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

9) கடந்த 28.03.2022 ம் தேதி அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா இருந்த நிலையில். அன்றைய தேதியில் அசல் வழக்கில் ஆட்சேபணை தயார் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாததால் குறித்த காலத்திற்குள் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய

இயலவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

10) மனுதாரர் கூறியுள்ள காரணங்களுக்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இம்மனுவோடு எதிர் வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். ஒவ்வொரு வழக்கும் அதன் தகுதியின் அடிப்படையில் தீர்மானம் செய்வதே சட்டப்படி சரியானதாக இருக்கும். மனுதாரர் கூறும் காரணத்தை கருத்தில் கொண்டு நீதியின் நலனுக்காக இம்மனுவை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் நவம்பர் திங்கள் 08 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-). J. Venkatesan,
கூடுதல் மாவட்ட நீதிபதி, ( மு.கூ.பொ)
( விரைவு நீதிமன்றம் )
விழுப்புரம்.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை

(Sd/-). J. Venkatesan,
கூடுதல் மாவட்ட நீதிபதி, ( மு.கூ.பொ),
( விரைவு நீதிமன்றம் ) ,
விழுப்புரம்.

J VENKATESAN

Digitally signed by J VENKATESAN
Date: 2022.11.09 16:05:17 +0530